தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு 2012

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

நேரம்: 90 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.

**எ+கா:** தமிழருடைய கொண்டாட்டங்களில் சிறந்தது ___தைப்பொங்கல்___.

(தைப்பொங்கல், தேர்த்திருவிழா, வாணிவிழா)

1. சிலப்பதிகாரத்தை எழுதியவர் ________________.

   (சோமசுந்தரப் புலவர், பாவேந்தர், இளங்கோவடிகள்)

2. திருக்குறள் ________________ குறள்களைக் கொண்டது.

   (130, 1330, 133)

3. இலங்கையை ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் வன்னியின் மன்னன் ________________.

   (அதியர்மான், சங்கிலியன், பண்டாரவன்னியன்)

4. இயல், இசை, நாடகம் என்பது ________________

   (முத்தமிழ், முக்கனி, முப்பால்)

5. கதிரவன் காலிக்கும் திக்கு ________________.

   (கிழக்கு, மேற்கு, வடக்கு)

6. ________________ வானொலியைக் கண்டுபிடித்தார்.

   (கிரகாம்பெல், கலிலியோ, மார்க்கோனி)

7. புகழ் என்பதன் எதிர்ச்சொல் ________________.

   (இகல், இகள், இகழ்)

8. பகற்பொழுது குறைவாக இருக்கும் காலம்.

   ________________.

   (கோடைகாலம், பனிகாலம், இலைதுளிர் காலம்)

9. சிறுமி ________________ என்று சிரித்தாள்.

   (மளமள, கலகல, சலசல)

tedc.org.uk

10. ஔவையார் ________________________ இருந்து நெல்லிக்கனியைப் பெற்றார்.

(அதியமானிடம், பாரியிடம், சின்னத்தம்பிப் புலவரிடம்)

11. நாங்கள் பாடம் படிக்கின்றோம். நீ பாடம்

________________________.

(படிக்கின்றாய், படிகின்றீர்கள் , படிக்கின்றேன்)

12. புறநானூறு, தமிழருடைய ________________________க் கூறுகின்றது.

(பண்பாட்டை, வீரத்தை, கொண்டாட்டத்தை)

13. அடங்காப்பற்று என்று________________________ அழைக்கப்பட்டது.

(வன்னி, கண்டி, யாழ்ப்பாணம்)

14. நாட்டின் மீது அன்பு கொள்வது ________________________.

tedc.org.uk

(நாட்டுப்பற்று, ஊர்ப்பற்று, வீட்டுப்பற்று)

15. இலைதுளிர் காலத்திற்குப் பின்னர் வரும் காலம்

________________________.

(பனி காலம், கோடை காலம், இலைஉதிர் காலம்)

16. ‘பொன்பூச்சொரியும்'' என்னும் பாடலைப் பாடியவர்

________________________.

(வில்லவராய முதலியார், சின்னத்தம்பிப் புலவர், பாவேந்தர்)

17. மூதாட்டி ________________________ நடந்து சென்றார்.

(மெல்லமெல்ல, துள்ளித்துள்ளி, பாய்ந்துபாய்ந்து)

18. 90 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________________.

(தொண்ணூறு, தொன்ணூறு, தொந்நூறு)

19. முரசு கட்டிலில் உறங்கிய புலவர் ______________________.

(ஔவையார், சின்னத்தம்பிப் புலவர், மோசிகீரனார்)

20. பழக்கடையில் நாங்கள் ____________________ வாங்கினோம்.

(பலங்கள், பளங்கள், பழங்கள்)

(புள்ளிகள் 20)

## 2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

tedc.org.uk

| | | |
|---|---|---|
| சிரித்துச் சிரித்து | பளபள | ~~நறநற~~ |
| விடியவிடிய | கொழுகொழு | கலீர்கலீர் |

**எ+கா:** மாறன் கோபத்தால் பற்களை நறநற என்று கடித்தான்.

1. சிறுமியின் பட்டுப்பாவாடை ____________________ என மின்னியது.

2. பனிக்கரடி ____________________ என இருக்கும்.

3. கூத்துகள் ____________________ நடைபெறும்.

4. மாணவர்கள் ____________________ ப் பேசி மகிழ்ந்தனர்.

5. சங்கவியின் சலங்கை ____________________ என ஒலித்தது.

(புள்ளிகள் 05)

3) பார்த்து, உறுப்பமைய எழுதுக.

ஔவையார் ஒரு பெண் புலவர்.

______________________________________________

விளையும் பயிரை முளையில் தெரியும்.

______________________________________________

(புள்ளிகள் 05)

4) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொற்களை வைத்து எழுதுக.

| அனுப்பிய | ~~பெய்த~~ | கேட்க | காண | அணிந்த | அழுத |
|---|---|---|---|---|---|

tedc.org.uk

எ+கா: நேற்றுப் ____பெய்த____ மழையால் வெள்ளம் வந்தது.

1. பறவைகளின் ஒலிகள் ____________ இனிமையாக இருக்கும்.
2. நீங்கள் ________________ அஞ்சல் கிடைத்தது.
3. ஔவையார் அதியமானைக் ________________ச் சென்றார்.
4. ________________ குழந்தையைத் தாய் கட்டி அணைத்தார்.
5. அம்மா ________________ சேலை அழகாக இருந்தது.

(புள்ளிகள் 05)

5) **கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி; வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.**

**எ+கா:** நான் நண்பியுடன் விளையாடினேன்.

1. சிறுமி பாட்டியின் ஊருக்கு நாளைக்குச் ________________.

2. சோமசுந்தரப்புலவர் சிறுவர் பாடல்களைப் ________________.

3. அதியர்மான் ஔவையாருக்கு நெல்லிக்கனியைக் ________________.

4. மறவனால் சிற்பம் ________________.

5. நான் வழியில் குயிலியைக் ________________.

(புள்ளிகள் 10)

tedc.org.uk

## 6) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ | ள் | ளு | வ | ர் | | கா | ம |
| தி | பா | வே | ந் | த | ர் | ள | ணி |
| ரு | ர | ந | ல் | வ | ழி | மே | மே |
| க் | தி | ஔ | வை | யா | ர் | க | க |
| கு | யா | இ | ள | ங் | கோ | ம் | லை |
| ற | ர் | ஆ | த் | தி | சூ | டி | |
| ள் | நா | ல | டி | யா | ர் | | |
| சி | ல | ப் | ப | தி | கா | ர | ம் |

tedc.org.uk

**புலவர்கள்**

எ+கா: காளமேகம் ______________

1. ______________
2. ______________
3. ______________
4. ______________
5. ______________

**நூல்கள்**

நாலடியார் ______________

1. ______________
2. ______________
3. ______________
4. ______________
5. ______________

(புள்ளிகள் 10)

## 7) தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து; கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| விளையாடச் | கவலையோடு | தேடி |
| நண்பன் | மிகவும் | மகிழ்ந்தான் |

சேயோன் நண்பர்களுடன் விளையாடச் செல்வான். அவன் ________________ நல்லவன். ஒருநாள் அவனுடன் விளையாடும் ________________ வேழன் விளையாட வரவில்லை. சேயோன் கவலை அடைந்தான். தன் நண்பனைத் ________________ அவன் வீட்டிற்குச் சென்றான். ஆனால் வேழன் அங்கு இல்லை. அதனால் சேயோன் ________________ வீடு திரும்பினான். தன் வீட்டில் வேழன் இருப்பதைக் கண்டு ________________.

(புள்ளிகள் 10)

tedc.org.uk

## 8) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக (சொல்லியமாக) எழுதுக

**எ+கா:** வகுப்பில் / மூன்றாம் / படிக்கிறான் / செல்வன்
செல்வன் மூன்றாம் வகுப்பில் படிக்கிறான்.

1. பாராட்டினார் / காவலர் / இனியனை / மிகவும்

   ______________________________.

2. ஆகும் / சிறந்த / நீச்சல் / உடற்பயிற்சி

   ______________________________.

3. விழாவில் / குறிஞ்சி / பிறந்தநாள் / பாடினாள்

   ______________________________.

4. வேட்டையாடச் / அதியமான் / சென்றான் / காட்டுக்கு

   ______________________________.

5. அஞ்சல் / கிடைத்தது / தம்பி / எழுதிய

   ______________________________.

(புள்ளிகள் 10)

tedc.org.uk

## 9) பந்தியைப் படித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

நாட்டார் பாடல்கள் நாட்டுப்புற மக்களால் பாடப்பட்டவை. அவை வாய்மொழி வழியாக வழங்கி வரும் பாடல்கள். நாட்டார் பாடல்கள் மக்களின் எளிமையான வாழ்க்கை முறைகளைக் கூறுகின்றன. இப் பாடல்கள் கேட்க இனிமையாக இருக்கும். மக்கள் கூடித் தொழில் செய்யும்போது குழுப்பாடல்கள் பாடுவர். தாய்மார் குழந்தையை உறங்கவைக்கத் தாலாட்டுப் பாடலைப் பாடுவர். அப்பாடலைக் கேட்டபடியே குழந்தை உறங்கும். இவற்றைப் போல் மேலும் பல நாட்டார் பாடல்கள் உள்ளன.

**எ+கா:** நாட்டார் பாடல்கள் எவற்றைக் கூறுகின்றன?

நாட்டார் பாடல்கள் மக்களின் எளிமையான வாழ்க்கை முறைகளைக் கூறுகின்றன.

tedc.org.uk

1. நாட்டார் பாடல்கள் யாரால் பாடப்படுபவை?

___

2. வாய்மொழியாக வழங்கி வரும் பாடல்கள் எவை?

___

3. நாட்டார் பாடல்கள் கேட்க எப்படி இருக்கும்?

___

4. தொழில் செய்யும் போது பாடப்படும் பாடல்கள் எவை?


___

5. தாய்மார் குழந்தையை உறங்கவைக்கப் பாடும் பாடல் எது?

___

(புள்ளிகள் 10)

## 10) படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் (சொல்லியங்கள்) எழுதுக.



1. ______________________________________________

______________________________________________

2. ______________________________________________

______________________________________________

3. ______________________________________________

______________________________________________

4. ______________________________________________

______________________________________________

5. ______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 15)